விலை: சதம் 75 ★ ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 5 ஜுல்ஹஜ் 22 இதழ் 249
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21 10-1981

## "யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசர மருந்துகள் உடன் அனுப்பி உதவுக"

### மேலிடத்திற்கு அவசரத் தந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவசரமாகத் தேவைப்படும் மருந்துகளை உடனே அனுப்பி உதவும்படி நேற்று அரச மருந்து களஞ்சிய அத்தியட்சகருக்கு வயர்லெஸ் தகவல் அனுப்பப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டையடுத்து மேற்கண்ட அவசரச் செய்தி அனுப்பப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியின் அவசரத்தேவைகள் பற்றியும், அரசதிணைக்களங்களின் தேவைகள் பற்றியும் நேற்று இந்த மகாநாட்டில் ஆராயப்பட்டது. காயமுற்று அனுமதிக்கப்படுகிறவர்களுக்குத் தேவையான பான்டேஜுகள், பஞ்சு மற்றும் சேலைன்போன்றனவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் இவைகளை உடனே தருவிக்கவேண்டும் என்றும் மகாநாட்டில் தெரி

[6-ம் பக்கம் பார்க்க]

# எலிஸபெத் மகாராணிக்கு இன்று குதூகல வரவேற்பு

(கொழும்பு)

**இருபத்தாறு வருடங்களுக்குப்பின்னர் இரண்டாவது தடவையாக இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் எலிஸபெத் மகாராணியாருக்கும், எடின்பரோ கோமகனுக்கும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கோலாகல வரவேற்பு அளிக்கப்படும்.**

மகாராணியாரும், கணவர் எடின்பரோ கோமகனும் விமான நிலையத்திலிருந்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, அமைச்சர்கள் ஆகியோரினால் வரவேற்கப்பட்டு, மோட்டார் பவனி மூலம் கொழும்புக்கு அழைத்துவரப்படுவார்கள்.

பிரிட்டிஷ் அரச தம்பதிகள் இன்று பிற்பகல் நான்கு மணிக்கு நியுஸிலாந்து நாட்டின் விசேட விமானப்படை விமானம் ஒன்றில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவார்கள். நியூஸிலாந்திலிருந்து நேராக இங்கு வரும் அரச தம்பதிகள் இலங்கையில் ஐந்துநாட்கள் தமது அரச விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வஜன வாக்குரிமையின் 50;வது ஆண்டு நிறைவு கொண்டாட்டக் கண்காட்சி லண்டனில் கடந்த ஜுலை மாதம் நடைபெற்ற போது மகாராணியாரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் திரு ஆர். பிரேமதாசா அழைப்புவிடுத்திருந்தது தெரிந்ததே.



மகாராணியாரும்
எடின்பரோ கோமகனும்

இன்று முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் இலங்கையில் தங்கவிருக்கும் மகாராணியாரையும் எடின்பரோ கோமகனையும் கௌரவிக்கவும் மகிழ்விக்கவுமென அரசாங்கம் பல லட்ச ரூபாய்களை அலங்காரங்களுக்கும் விசேடநிகழ்ச்சிகளுக்கும் செலவு செய்துள்ளது.

இன்று மாலை அரச தம்பதிகளது விசேட விமானம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தரை தட்டுவதிலிருந்து 25-ம் திகதி நண்பகல் இவர்கள் தாயகம் திரும்பும் வரையிலான நிகழ்ச்சிகளையும் வைபவங்களையும், பவனிகளையும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன தலைமையிலான குழுவினர் மிகுந்த அவதானத்துடனும் தகுந்த பாதுகாப்புகளுடன் ஒழுங்கு செய்துள்ளனர்.

அலங்கார மோட்டார் பவனியில் மகாராணியின் வருகைக்கென அரசாங்கத்தினால் விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட "கடிலக்" ஆடம்பர மோட்டார்கள் பயன்படுத்தப்படும்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்பதிகள் இன்று இரவு மகாராணியாருக்கும், எடின்பரோ கோமகனுக்கும் விசேட விருந்தளிப்பார்கள்.

நாளைக் காலை ஒன்பது மணிக்கு காலிபேஸ் திடலில் இலங்கை மக்களின் பொது வரவேற்பு ஒன்று இடம்பெறும். இவ்வைபவம் சர்வஜன வாக்குரிமை பெற்ற 50-வது ஆண்டுநிறைவு குறித்தே நடாத்தப்படுகிறது. தெற்கிலுள்ள பிரபல பாடசாலைகளுட்பட ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்த மூவாயிரம் மாணவர்கள் அரசதம்பதியரை மகிழ்விக்கும் பொருட்டு அணிநடை மரியாதைகளை நடாத்துவர்.

நாளை இரவு மகாராணியாரும் பரிவாரத்தினரும் கோட்டை புனித பிரதநிலையத்திலிருந்து இரவு பத்து மணியளவில் அனுராதபுரம் புறப்படுவார்கள்.

இப்பிரயாண நேரம் பத்து மணித்தியாலங்கள் ஆகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாணப் பெட்டிகள் பதினைந்து லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாளை மறுதினம் காலை ஒன்பது மணிக்கு அனுராதபுரம் வந்தடையும் அரச விருந்தினர் அந்த பலவேறு பகுதிகளையும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிட்ட பின்னர், அங்கிருந்து கண்டிக்கு மோட்டார் காரில் பயணமாவார்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

## வள்ளங்கள் மோதின: இளைஞர் பலி!

(யாழ்ப்பாணம்)

ஆழ்கடலில் மீன்பிடித்துவிட்டு கரை திரும்பிய இரு இயந்திர வள்ளங்கள் மோதிக்கொண்டதில் இளைஞர் ஒருவர் பலியானார்!

குருநகர்க் கடல் பகுதியில் நேற்று அதிகாலை நான்குமணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

பாக்கியநாதன் ஞானசீலன் (வயது 18) என்ற இளைஞரே இவ்வள்ளங்கள் மோதலுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். (மா)

## லயனல் விசாரணைக் குழு: விண்ணப்பப் படிவங்கள் துரிதகதியில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ தலைமையிலான நட்டஈட்டு விசாரணைக்குழுவின் பூர்வாங்க வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நட்டஈட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள், இதற்குரிய படிவங்களைக் கொழும்பு பாதுகாப்பு அமைச்சு, யாழ்ப்பாணம் கச்சேரியில் அமைந்துள்ள நட்டஈட்டு விசாரணைக்குழு செயலகம், திருகோணமலைக் கச்சேரியில் அமைந்துள்ள விசாரணைக்குழுத் தலைமைச் செயலகம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள நட்டஈட்டு விசாரணைக் குழுச் செயலகத்தில், விசாரணைக்குழுவின் உதவிச்செயலாளர் திரு. செ. கணேசிடம் முதல்நாள் நண்பகலுக்குள் கடைச் சொந்தக்காரர்கள் 97 பேர் வரை நட்டஈட்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது. (மா)

## டாக்டர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை ஒன்றுக்கு அழைக்கப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவர் நேற்று முன்தினமிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக வைத்து தாக்கப்பட்டாராம்.

அவருடைய "ஸ்கூட்ட"ரின் முன்பக்கமும் சேதப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

## சில கடைகள் மட்டும் திறந்திருந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சில கடைகள் திறந்திருந்தபோதிலும் வியாபாரம் மந்தமாகவே நடைபெற்றது.

பொது மக்களின் நடமாட்டம் வழக்கம் போலன்றிக் குறைவாகவே காணப்பட்டது.

நகரில் சில கடைகள் திறக்கப்படவில்லை. மா

## மாணவர் வரவு குறைவு: பாடசாலைகள் மூடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள அதிகமான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகவும் குறைவாக இருந்ததால் நேற்று அரை நேரத்துடன் பாடசாலைகள் மூடப்பட்டன. (மா)

## மயானத்தில் தகனம்செய்ய இராணுவம் மறுக்கவே வீதியோரத்தில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

மாதகல் கிராமத்தில் மரணமான ஒருவரின் சடலத்தை, அங்குள்ள மயானத்திற்கு தகனம் செய்யக் கொண்டுசென்றபோது, இராணுவத்தினர் தடுத்ததால் சடலத்தை வீதியோரத்தில் தகனம் செய்தனராம்.

இந்த மயானம் மாதகல் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ளது.

மறுநாள் காடாத்துவதற்கு சென்றபோது அங்கு வரவேண்டாம் என்று அங்குள்ள இராணுவத்தினர் தடுத்தனராம்.

இது சம்பந்தமாக உறவினர்கள் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கும், மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு நடராசாவுக்கும் புகார் செய்தனர்.

இதனைத்தொடர்ந்து திரு. சு. நடராசாவும், திரு தேவநேசன் நேசையாவும் சேர்

6-ம் பக்கம் பார்க்க

## கண்ணதாசனின் பூதவுடல் இன்று தகனம்

சென்னை

கடந்த சனிக்கிழமை சிக்காகோ மருத்துவமனையில் காலமான தமிழ்நாடு ஆஸ்தான கவிஞர் கண்ணதாசனின் இறுதிச் சடங்குகள் இன்று புதன்கிழமை சென்னையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

# தத்துவக் கவிஞர் கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன் ஏற்றதொரு கருத்தை (என)து உள்ளம் என்றும் எடுத்துரைப்பேன்; எவர் வரினும் நில்லேன்! அஞ்சேன்" கவியரசு கண்ணதாசன் அவர்களின் வாழ்க்கை நெறி-இலட்சியம் இது. பத்து ஆண்டுகட்கு மேலாக அவர் நடாத்திய "தென்றல்" வார ஏட்டின் எண்ணமாக இது மிளிர்ந்தது.

★ ★ ★

இலங்கை-வேலணையைச் சேர்ந்த மறைந்த இளம் கவிஞர் முகிலன் அவர்கள் 1959ம் ஆண்டு கவியரசு அவர்களிடம் பின்வரும் வினாவைத் தொடுத்தார். "அறிஞர் அண்ணாவைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?"

கவியரசுவின் பதில் "எல்லோருக்கும் நான் தலைவனாக இருக்க ஆசைப்படுகிறேன். ஆனால் ஆயுட்காலம் முழுவதும் அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தொண்டனாகவே இருக்க ஆசைப்படுகிறேன். அவரைப் பற்றி என் கருத்து என்ன என்பதற்கு இது போதாதா? தென்றல் 5-12-'59

★ ★ ★

"அசல் மன்னனும் அண்ணாவின் மன்னனும்" என்ற கட்டுரைத் தொடரில் ("அல்லி" 1960) அறிஞர் அண்ணாவை கண்ணதாசன் ஆசைதீரத் திட்டியும் தீர்த்திருக்கின்றார். கண்ணதாசனைப் போன்று அறிஞர் அண்ணாவை (1960-1962) காலப் பகுதியில் மட்டும்) சாடியவர்கள் உலகில் வேறு யாரும் இருக்கமுடியாது.

★ ★ ★

1960ம் ஆண்டின் பிற்பகுதி. தி. மு. க.வில் பிளவு கண்ட நேரம். சினிமா நடிகர்களின் செல்வாக்கு தி. மு. க.வில் அதிகரித்துவிட்டதாக ஈ. வி. கே. சம்பத் அவர்கள் பகிரங்கமாகக் குறை காண்கின்றார். கண்ணதாசன் அவர்களும் சம்பத்துடன் இணைகின்றார். பிரச்சினை பெரிதாகித் தமிழ்நாடு பூராவும் சம்பத்-கண்ணதாசன் இணைந்து பிரசாரக் கூட்டங்களை நடாத்திவருகின்றார்கள். திருச்சி டவுன் ஹோல் மண்டபத்தின் முன் ஒரு பொதுக் கூட்டம். மக்கள் வெள்ளம் நிரம்பி வழிகின்றது. இரவு ஒரு மணியிருக்கும். கூட்டத் தலைவர் கண்ணதாசனைப் பேச அழைக்கின்றார். வழமையான தர்பாருடன் கண்ணதாசன் மேடைக்கு வருகின்றார். முன் வரிசையில் இருந்த ரிக்ஷா இளைஞரின் பாதுகை ஒன்று கண்ணதாசனின் கன்னத்தைப் பதம்பார்க்கின்றது. கூட்டத்தில் பதட்டம். அரை மணி நேரத்தில் அமைதி-மீண்டும் கண்ணதாசன் பேசுகின்றார். தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் அன்றைய சினிமா நடிகர் கண்ணதாசனின் பேச்சின் மூலதனமாகின்றார். அதே சினிமா நடிகர் நேற்று கண்ணதாசனை அரசவைக் கவிஞராகக் கொலு அமர்த்தினார்.

★ ★ ★

எதையும் எளிமையாகவும்-நகைச்சுவையாகவும் எடுத்துக் கொள்வது கவிஞரின் வழக்கம். அரசவைக் கவிஞராக அவர் நியமிக்கப்பட்டபொழுது அவர் கூறியது "நான் செத்தால் எனது பிரேதத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச்செல்லப் பிரமிக்கவேண்டி வரும்."

★ ★ ★

கவிஞர் எழுதிய திரைக் கதைகளுள் அவருக்குப் பிடித்தது "மதுரைவீரன்". அவர் எழுதிய கதைகளுள் அவருக்கு மிகவும் பிடித்தது "சேரமான் குடிக் கிளவி".

★ ★ ★

கண்ணதாசன் கூறியவை!

**காதல்**

தாய்மையின் குழைவும், தந்தையின் பரிவும், பூமியின் பொறுமையும், பொறுப்புள்ள புன்னகையும், துணை வாடுதல் வாடும் ஓருயிர் உணர்வும் எங்கே தோன்றுகின்றனவோ அங்கே வாழ்வது தான் காதல். என் தத்துவம் இதுதான். காதல் இரண்டு வகைப்படும்! ஒன்று தோல்வியுறுவது; மற்றொன்று குப்பை வயதுக்கு மேல் வருவது.

**காலம்**

நான் என்பதை என்று வைத்துக்கொண்டு நானே என்பதைக் காலத்துக்கு விட்டு விட்டேன். நான் கேள்வி கேட்கிறேன்; காலம் பதில் சொல்கிறது.

சில சமயங்களில் காலம் என்னிடம் கேள்வி கேட்கும்; நான் பதில் சொல்வதில்லை ஓடிப் போகும் அதை அறிவேன்; ஓடிப்போய்விடும். மறுநாள் என் காலடியில் வந்து உட்கார்ந்திருக்கும். நான் அதற்கு ஆறுதல் கூறுவேன்.

இவ்வளவு வலிய காலம் ஏன் அடங்குகிறது? காரணம் இதுதான்.

அது அடிக்கும்போது நான் அழுவதுமில்லை; அணைக்கும் போது சிரிப்பதுமில்லை. காலம் என்னிடம் தோற்றுவிட்டது.

**துணிச்சல்**

சாவு பிறரைக் கொல்லுகிறது. துணிந்தவன் சாவைக் கொல்லுகிறான். இறந்தவை பிறரை ஆள்கிறான் ஒரே வேளை. நீ ஆள்பவனாக மாற விரும்புகிறாயா? ஆளப்படுபவனாக மாறவிரும்புகிறாயா? அடிமைக்கு மூச்சு மட்டும் போதும் வீரனுக்குத் தான் பேச்சும் வேண்டும்.

அது ஒரு பேராசிரியன் இடுகாடு. அது ஒரு பள்ளிக்கூடம் நான் சாவை நேசிக்கிறேன் அது எனக்கு வாழ்வைக் காட்டுகிறது. நான் சாவைப் பற்றிச் சிந்திக்கிறேன். அது சீக்கிரமாக உலகத்தை அனுவிக்கும்படி என்னைத் தூண்டுகிறது. சாவு வருவது போலக் காண்கிறேன். தன் முறைக்குப் பொருள் சேர்த்திடும் படி அது என்னை அவசரப்படுத்துகிறது. சாவை நான் புரிந்து கொண்டுவிட்டேன் அதனால் என் வாழ்வு தெளிவாகிவிட்டது. நான் செத்ததாகவே முடிவு கட்டிக் கொண்டுவிட்டேன். அதனால் வாழ்வதாக நினைத்துக்கொண்டிருப்பவர்களையும் பார்க்கும் போது எனக்குச் சிரிப்பு வருகிறது. எல்லோரும் ஒரு சமயம் சாவார்கள். அவர்களை நான் பார்த்துக் கொண்டே இருப்பேன். அவர்களைப்பற்றி நான் பாடல் எழுதுவேன். நான் மட்டும் இனிச் சாக மாட்டேன்! நான் தான் ஏற்கனவே செத்துவிட்டேனே! செத்தவன் எதற்காகப் பயப்படவேண்டும்? வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டே இருப்பேன். எப்போதாவது என் பெயரைச் சொல்லி நான் செத்துவிட்டதாக யாராவது சொன்னால் அவர்களுக்கு நீங்கள் சொல்ல வேண்டியது இதுதான்.

"அவன் ஏற்கனவே செத்து விட்டான் இப்போது செத்தது அவன் உடம்புதான்"

"தென்றல் 14-11-59

கவியரசு கண்ணதாசன் இன்றோ செத்து விட்டார் - அவர் கூறியபடி இன்று செத்தது - அவர் பூதவுடல் தான். இது கவிஞரின் தத்துவ வட்டி.

1960 ஆம் ஆண்டுடன் அரசியல் கவிஞர் செத்து விட்டார். 1981ம் ஆண்டு செத்தது தத்துவக் கவிஞர் காலம் தான் இதற்கு பதில் கூற வேண்டும்.

— இ. சங்கர்


## முகூர்த்த நேர மாற்றம்

காங்கேசன்துறையைச் சேர்ந்த
சுப்பையா தம்பதிகளின் புதல்வன்

**தவபாலச்சந்திரனுக்கும்**

கோண்டாவிலைச் சேர்ந்த
சிவசுந்தரம் தம்பதிகளின் புதல்வி

**உமாராணிக்கும்**

ஞாயிற்றுக்கிழமை (25-10-81) இரவு 7-00 மணிக்கும் 9-00 மணிக்கும் இடையில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் அதே தினம் பகல் 11-00 மணிக்கும் 12-00 மணிக்கும் இடையில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் என்பதையும் 28-10-81 மாலை 4 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த வரவேற்புசாரமும் காலவரையின்றி பின்போடப்பட்டுள்ளது என்பதையும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுப்பையா தம்பதிகள்
'அம்பிகை வாசம்,'
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

சிவசுந்தரம் தம்பதிகள்
'திருச்செல்வஜோதி'
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

1269



எங்கள் உற்பத்திகளில மேலும்சில சோகினறன!



சக்தி செறிந்த
∴பைசர்
பிறிமிக்ஸ்'ஏ'
கலவைகள்

- வளர்ப்புக் கோழிகளுக்கு ப்றீடர் பிறிமிக்ஸ் 'ஏ'
- இறைச்சிக் கோழிகளுக்கு ப்றெயிலர் பிறிமிக்ஸ் 'ஏ'
- முட்டைக் கோழிகளுக்கு லேயர் பிறிமிக்ஸ் 'ஏ'

500 கிராம் பக்கெட் விலை ரூ. 28/- முதல் ரூ. 42/- வரை.

புதிதாகத் தயாரித்த கலவைகள் என்பதால் சத்துக் குறையாமல் உடன் தயாரிப்பின் உத்தரவாதமான பயன் உங்கள் கோழிகளுக்குக் கிடைக்கும் கிட்டிய கோழித் தீன் வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்

விசாரணைகள்
Pfizer ∴பைசர் லிமிட்டெட்
688, காலி வீதி, ரத்மலானை.
277, காலி வீதி, கொள்ளுப்பிட்டி


## யாழ். கடற்கரைப் பகுதியை பாதுகாக்க நடவடிக்கை
### கடற்றொழில் அமைச்சு ஆய்வு

(புலோலி)

யாழ்ப்பாண மாவட்டக் கடற்கரைப்பகுதிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கடற்றொழில் அமைச்சு கரையோர ஆய்வுகளைத் துரிதமாக மேற்கொண்டுள்ளது

பல்கலைக்கழக புவியியல் பட்டதாரி மாணவர்கள் மூலம் கடற்றொழில் அமைச்சு கடற்கரையோரப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கரையோர ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்து வருகின்றது

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகப் புவியியல் விரிவுரையாளர் திரு ஸ்ரீகாந்தன் தலைமையில் புவியியல் பட்டதாரி மாணவர்களான க. அரியரத்தினம், புண்ணியசீலன், யோகராசா, பாலச்சந்திரன், கணபதி, கனகராசா ஆகிய இருவரும் இந்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

பூநகரியிலிருந்து தீவுப்பகுதி யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, மயிலிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, இன்பருட்டி, பருத்தித்துறை, சுற்றிகுளம், மணற்காடு, குடத்தனை, செம்பியன்பற்று, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, ஆனையிறவுக்கு அருகில் உள்ள சாலை என்னும் இடம் வரையில் இக்குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்கரையில் இருந்து முன்னூறு மீற்றர் தூரத்திற்குள் உள்ள நிலப்பயன்பாடு, நிலத்தின் தன்மை, பயன்தரக் கூடிய கரையோர உரிமைகள், மீன்பிடித்தல் காரணிகள், கரையோரங்களில் மண் அரிப்புக்களால் ஏற்படும் நிலைக்கு காரணம் மக்களின் வாழ்க்கை முறைகள் என்பவைதைப் பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

கரையோரப்பகுதி மக்களுடன் இது சம்பந்தமான கலந்துரையாடல்கள் மூலம் கடந்த 30 வருட காலத்தில் இம் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட நில இழப்புக்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன

இவ் ஆய்வு 18 பக்கங்களைக் கொண்ட வினாக் கொத்தின் அடிப்படையில் செய்யப்பட்டு வருகின்றது இப் பகுதிகள் தற்போது கடலினால் சூழப்பட்டு வருவதினால் இவ் ஆய்வுக் குழுவினர் அது பற்றி ஆராய்ந்து புதிய நில உறுப்புகளைத் தயாரித்து வருகின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ!


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோண்டாவில் உப்புமடம் ஒழுங்கையில் 2½ காணி வீடு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மு. சுந்தரம், தாவடிச் சந்தி. 1262

சத்திரமடம் ஆத்திசூடி வீதியில் இரண்டு பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இ. ஆறுமுகம், கால்நடை ஆராய்ச்சிப் பண்ணை, திருகோணமலை. 1244

யாழ்ப்பாணம் நல்லூரிலும் சுண்டிக்குளியிலும் வீடு வளவுகள் விற்பனைக்குண்டு. சு. துரைரத்தினம், 50, பாரதி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1268

### தவறிவிட்டது

டலாலி கோண்டாவில் வீதி அல்லது இராசவீதியில் டயறியும் முக்கிய குறிப்புகள் இல்லதும் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். வ. சிவராசபதி, போயிட்டி, நீர்வேலி. 1267


## கந்தசஷ்டி விழா

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி கதிர்மலை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் இம்மாதம் 28ந் திகதி புதன்கிழமை முதல் கந்தசஷ்டிப் பெருவிழா நடைபெறவிருக்கிறது.

### மணிவாக்கு

எதைக்குறித்து நாம் அஞ்சுகிறோமோ அதற்கு அச்சத்தின் மூலம் வரவேற்பையும் நாம் கொடுத்துவிடுகிறோம்.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## மகாராணிக்கு மங்களம்

இன்று இலங்கை மண்ணில் இரண்டாவதுமுறை கால் வைக்கும் மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிசபெத் மகாராணிக்கும் அவரின் கணவர் எடின்பரோ கோமகனுக்கும் நல்வரவு கூறுவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம்;

அரச தம்பதிகளின் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் வெற்றிகரமாக முடிகவென வாழ்த்துகின்றோம்.

நாம் நேற்றுக் குறிப்பிட்டதுபோல் இன்று எம்மத்தியில் வரும் எலிசபெத் மகாராணி ஒரு பெரும் தனநாயக நாட்டின் தலைவி மட்டுமல்ல, சுதந்திரமடைந்த எமது நாடு போன்ற பல நாடுகள் ஒருங்கிணைந்த பிரிட்டிஷ் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவியுமாவார்; இதற்குமேலாக பிரிட்டிஷ் அரசபரம்பரைப் பண்பாட்டின் பெருஞ் சின்னமாகவும் விளங்குகின்றார்.

அரச தம்பதிகளின் வருகை எங்கள் நாட்டுக்கு, ஒரு குடும்ப அந்நியோன்னிய உணர்வை நினைவூட்டுவது சரித்திர சம்பவங்களுக்குப் பொருத்தமானது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில் மாட்சிமைதங்கிய மகாராணி நாட்டின் பெருமைமிக்க தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் எவற்றையாவது பார்வையிடும் வாய்ப்பில்லை என்பது எமக்கு ஏமாற்றம் அளிக்கிறது.

இலங்கையின் சர்வஜன வாக்குரிமைப் பொன்விழா ஒரு தேசிய விழா; இருந்தும் ஆளுங்கட்சியை விட எத்தனை அரசியல் கட்சிகள் சமூகங்கள் இவ்விழாவில் கலந்துகொள்கின்றன? இங்கு வாழும் பொதுமக்கள் மகாராணியைப் பார்த்து மகிழும் பேராசை கொண்டவர்கள். அந்த வாய்ப்புக்கிடையாதது விழாவின் பெருமையையும் பாதிக்கின்றது.

அஃதிங்ஙனமாக, இச் சுதந்திரநாடு இன்று காணும் சங்கடங்கள், உலகப் பொதுநோக்கில் பாரதூரமானவையென்று நாம் கருதவில்லை; இருந்தும் ஒரு குடும்பத்தின் தலைவியென்ற முறையிலும்; தங்களை மக்கள் வழிபாராகக் கருதிய அரச பரம்பரையின் அணிகலமாக விளங்கும் செல்வாக்கு நிறைந்த பொது நல அமைப்பின் தலைவி என்ற அடிப்படையிலும், இந்நாட்டில் நிலவும் முக்கிய அரசியல் சிக்கலை அனுபவரீதியில் அணுகி மக்கள் சிறப்பாக வாழ, பிரிட்டிஷ் நீதி என்ற பெருநிதியில் ஒரு பங்கை அள்ளிவழங்க முன் வருவீராக!

பல்வேறு இன, மத, மொழி கொண்ட ஒரு நாட்டின் பிரஜைகள் சமத்துவ வாழ்வில் சுயமரியாதையையும் மனித உரிமைகளையும் பேணப் பொது நல அமைப்பு உதவ வேண்டும் தங்கள் தனிப்பட்ட ஆசியும் வேண்டும்! நாட்டில் இன்று நலிவுறும் தமிழ் மக்கள் சார்பில் அரச தம்பதிகளை மீண்டுமொருமுறை வாழ்க வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

## வதந்திகள்

தந்திகள் இந்த நாட்டில் போய்ச்சேர நீண்டநேரமெடுக்கின்றன. சில வேளைகளில் தபால் அட்டை அவற்றைக் தட்டி முந்தி விடும்.

அவசரமாக ஒரு அலுவலைப் பார்க்க வேண்டுமென்றால் ஒருவித கம்பியில்லாத் தந்தியே சொன்னது கேட்கும்; அதுதான் வதந்தி.

வதந்திகள் என்றால் அவை யாவும் பொய்யென்பது அர்த்தம், எனவே பொய் வதந்திகள் என்று சொல்வது பச்சைப்பொய் என்ற பொருள் படுகிறது.

வதந்திகள் பரப்புவதில் இன்பம் காண்பவர் குடிக்கு அடிமையாகிறவர் போல அத்தொழிலை இலகுவில் கைவிடவிரும்பார். தான் புனைந்த பொய்க்கதையே தன்னிடம் திரும்பிவரும் போது, முதலும் வட்டியும் எதிர்தொகையாகப் பெருகியிருக்கிறதென்பதைக்கண்டு பேருவகை கொள்வார்! இதில் இனிய அம்சம், தன்னிடம் அது திரும்பிவரும் போது, அதனை அங்கு கொண்டுவந்து சேர்ப்பவர் இவரே அதன் ஆதி தந்தையென்பதை உணரமாட்டார்.

கேள்விச்செவியன் ஊர்குடியைக்கெடுத்தான்; அது அந்தக்காலம். கேள்விச்செவியன் ஊரைக் கெடுத்தான் - அதுவும் அந்தக்காலம். இன்று அவன் நாட்டையே கெடுக்க வல்லவன்.

ஊரின் உயிரை உறக்கத்தில் போடும் சக்தி வாய்ந்தவை வதந்திகள். அவை நடப்பதோ, ஓடுவதோ இடையாது; அவை யாவும் பறப்பன என்று ஒரு லத்தீன் பழமொழிஉண்டு. இங்கிலீஷில் அவை காட்டுத் தீபோல் பரவுமென்பர்.

இவை யாழ்ப்பாணத்தின் பிரத்தியேகச் சொத்தென நினைப்பது தவறு. இந்த வியாதி எங்கும் உண்டு. மழை காலத்தில் மாரி தவளை போல, குழப்ப காலத்தில் வதந்திகளே ஊர் மன்னராக அதிகாரம் பெறுகின்றன.

திட்டமிட்ட வதந்திகள் என்றால் அவை [Superfine] அதிநுட்ப தயாரிப்புகள்.

உதாரணங்களைக்கொடுத்து வதந்தி ஆராய்ச்சியில் ஈடுபடும் வாசகர்களின் கற்பனை சக்தியைத் தட்டியெழுப்ப விருப்பமில்லை.

ஒரே ஒருபிரச்னை; பொலிஸாரோ, இராணுவத்தினரோ, அரசாங்க அதிபரோ, அபிவிருத்தி சபைத் தலைவரோ தீர்த்துவைக்க முடியாத சங்கடம்

உண்மைச் சம்பவங்களுக்கும் வதந்திகளுக்கும் இடையே உள்ள எல்லை எது? அது இடையே என்று இக்காலத்தில் கூறினால் அது மிகையாகாது.

பூதக்கண்ணாடியும் உதவாது! ஆண்டவா! நீயே தஞ்சம் என்றும் நிலைமை சுமுகமாகிறதாவென்றும் வேட்டைநாயின் மோப்பச் சக்தியை விருத்திசெய்வதே விவேகம்!

# பொதுநலஅமைப்புத்தலைவி இன்று இலங்கை வருகிறார்

மகாராணி இரண்டாம் எலிஸபெத்தும் அவரது கணவர் பிலிப் கோமகனும் இன்று இலங்கை வருகிறார்கள்.

நீண்டகால வரலாற்றையுடைய பிரிட்டனின் முடியாட்சியின் கீழே இலங்கையும் ஒரு நாடாக இருந்தது. இப்போது இலங்கை சுதந்திரம்பெற்று, பூரண இறைமையுள்ள குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டாலும் பொதுநலவமைப்பு நாடுகளில் ஒரு நாடாக அங்கம் வகிப்பதன் மூலம் மகாராணியின் தலைமையை இலங்கை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மகாராணியே பொதுநலவமைப்பு நாடுகளின் தலைவியாவார்.

### மாலி

இந்தப் பொதுநலநாடுகள் அமைப்பு சற்று வியப்புக்குரியதுதான். பிரிட்டனின் முடியாட்சியின் கீழ் கொடுமைப்படுத்தப்பட்ட நாடுகள்-விடுதலைக்காக கிளர்ந்தெழுந்த நாடுகள் தங்கள் சுதந்திரத்தின்பின் மீண்டும் இந்த அமைப்பில் ஒரு குடும்ப அந்நியோன்னியத்தை ஏற்படுத்திச் சுமுகமான உறவைக் கொண்டிருக்கின்றன.

இந்த உறவைத்தொடர்வது சாத்தியமா என்ற வினா பல தடவைகளில் எழுப்பப்பட்டது. குறிப்பாக இந்தியா குடியரசாகியபோது எழுப்பப்பட்டது. "சாத்தியமற்றது" என்றே அதற்குப் பதிலும் கூறப்பட்டது. ஆனால், 'மகாராணி பொதுநலவமைப்பின் தலைவி' என்ற கொள்கையை நேரு ஏற்றுக்கொண்டார்!

### பொதுநலவமைப்பின் பொது அபிலாஷைகள்

தவறுகள் பல நேர்ந்துள்ள போதிலும், சாம்ராஜ்யத்திலிருந்து, சமத்துவமான, சுதந்திரமான பங்காளர்களின் 'பொதுநலவமைப்பு' என்ற நிலைக்கு ஏற்பட்ட மாற்றம், அமைதியாகவே ஏற்பட்டது.

அரசமைப்பு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஏற்பட்ட சில விளைவுகள் இந்நாடுகளிடையே ஒரு பொது நோக்கினை ஊக்குவிப்பதாக அமைந்தன. அரசியல் நிறைவேற்றுத்துறையினதும் நீதித்துறையினதும் தனித்தனிப்பணிகள், சட்டத்தின் கீழ் தனிமனித உரிமைகள், ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற ரீதியிலான வாக்குரிமை என்ன இவையாவும் 'வெஸ்ட்மினிஸ்டர்' பாணி ஜனநாயகத்தின் அம்சமாகவும் அதே வேளை, இந்நாடுகளின் பொது அபிலாஷைகளாகவும் இருந்தன. இவை இந்தக் குடும்ப உறவை வலுப்படுத்துவதாக இருக்கின்றன.

### பிரிட்டன் அன்றும் இன்றும்

பிரிட்டனின் இன்றைய முடியாட்சிக்கும் முன்னைய முடியாட்சிக்கும் பெரும் வேறுபாடு உண்டு. 'அரசர்கள் தெய்வீக உரிமை படைத்தவர்கள்' என்று தாபிக்க முற்பட்ட ஸ்ருவர்ட் மன்னர் காலத்து முடியாட்சி, இன்று பல மாற்றங்களுக்கு உள்ளாகிவிட்டது. 17ம் நூற்றாண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவந்த அரசியல் சீர்திருத்தங்கள், மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வலியுறுத்துவனவாக இருந்து வந்துள்ளன. இதன்விளைவாகக் கொள்கைப் பிரகடனவிடயத்தில் முடி எப்போதும் அமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்கும் அளவுக்குமுடியின் அதிகாரங்களில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனாலும் அரசமைப்புச் சட்டத்தின்படி, பாராளுமன்றத்தின் ஆலோசனையை ஏற்க மறுக்கும் அதிகாரமும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் முடிக்கு இன்றும் உண்டு ஆனால் இவ்வதிகாரங்களை பட்டத்திலிருக்கும் எவரும் மிகமிக அபூர்வமாக அவசியமான நிலையன்றி லேயேயன்றிப் பிரயோகிக்கப்படமாட்டாதென்பது திண்ணம்.

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### உலாப்பாடுவதை விடுத்து ஆக்கப் பணிபுரிவோம்

தங்கள் 'ஈழநாடு' 27-9-81ல் இதழில் வெளிவந்த மக்கள் கருத்தில் தம்பி திரு. க. சி. இராசேஸ்வரன் விடுத்தவேண்டுகோள்-உண்மையில் மக்கள் யாவராலும் வரவேற்கவேண்டியதே. அத்தப்பணியாற்ற வேண்டுமெனப் பணிவாக வேண்டுகின்றேன்.

எமது தலைவர்களோ, அறிஞர்களோ, கலைஞர்களோ இந்தச் சிறந்த புராதன நினைவுச்சின்னங்களையோ, வரலாற்றுக்கான பரம்பரைக் கதைகளையோ ஏன், ஏட்டுருவில் கலைக்களஞ்சியங்களில் புதைந்துள்ள வரலாற்றுப் பொக்கிஷங்களை நிலைபெறச் செய்வதற்கு வருங்காலச் சந்ததியினருக்கு உபயோகப்படுவதற்கு முயற்சி எடுக்கமுன்வரவில்லை என்பதை எண்ணுந்தோறும் துக்கப்படவேண்டித்தான் இருக்கின்றது. யாழ். நகரில் உள்ள எத்தனையோ நினைவுச் சின்னங்கள் அழித்

(6-ம் பக்கம் பார்க்க)

# நினைவுகள் சாவதில்லை

1961-ம் ஆண்டு நான் "ஈழநாடு"வில் சேர்ந்த புதிது. சத்தியாக்கிரகம் உச்சக்கட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. "ஈழநாடு" பத்திரிகையும் காலை, நண்பகல், மாலை என்று பல பதிப்புகளாக வெளிவந்துகொண்டிருந்தது.

அலுவலகத்தில் 'சும்மா' நின்றுகொண்டிருந்தேன். ஹரன் ஐயா என்னைக் கண்டார். "என்ன சும்மா இங்கேயே நிற்கிறீங்க. கச்சேரிப் பக்கம் போய் எதையாவது கொண்டு வாங்க... இங்கே வேலை இல்லை..." என்று அதட்டினார். எனக்கு அப்பொழுது செய்தி எடுப்பதில் அனுபவம் இல்லை. அங்குமிங்கும் சுற்றிவிட்டு எதையோ "கன்னா பின்னா"என்று எழுதிக்கொண்டு வந்தேன், அவரிடம் கொடுத்தேன். வாசித்துவிட்டு, "நீங்க லாயக்கில்லை" என்று சொல்லி குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டார். அதனுடன் விட்டாரா? "இங்கே உங்களுக்கு வேலை இல்லை. நல்ல செய்தியா கொண்டுவாங்க..." என்று விரட்டிவிட்டார்!

யோசித்தேன் இங்கு இருப்பதானால் எதையாவது யாரிடமாவது கேட்டுப் படித்தாக வேண்டும் அல்லது தொழிலுக்கு முழுக்குப்போட்டுவிட்டு வெளியேறிவிடவேண்டும்.

இரண்டு நாட்கள் கடந்தன. ஒருமுடிவுக்கு வந்தேன். கையில் ஒரு 'புள்ஸ்கப்' தாள். நேரே கச்சேரியடிக்கு [சத்தியாக்கிரக நேரம்] சென்றேன். இருபது இளைஞர்களைச் சந்தித்தேன் எனது 'திட்ட'த்தை மனதில் வைத்து செயல்பட்டேன். சுமார் நூறு இளைஞர்கள் கையெழுத்திட்டு, பெருவிரலில் குண்டூசியால் குத்தி இரத்தம் ஓரளவு கசிந்ததும் ஒவ்வொருவரின் கையெழுத்துக்கு நேரேயும் பெருவிரலை அழுத்தி அந்த 'மகஜரை' திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் [தந்தை] அவர்களிடம் இளைஞர்கள் [சுமார் இருபது பேர் - நானும் சேர்ந்து தான்] கையளிக்க வைத்தேன். 'திட்டம்' சரி

நேரே அலுவலகம் வந்தேன், எதனையோ முடிந்தவரை கிறுக்கினேன். ஹரன் ஐயாவிடம் கையளித்தேன். படித்தார், விபரமும் தெரிந்துகொண்டார். "பேஷ் பேஷ்... நீங்கள் முன்னுக்கு வந்துவிடுவீங்கள்..." உற்சாகப்படுத்தினார்! எனது செய்தி முதற்தடவையாக முதலாம்பக்கத்துத் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. தலைப்பு இவ்விதம் இருந்தது:

"இரத்தத்தில் கையெழுத்திட்டு, 100 இளைஞர்கள் பிரதமருக்கு மகஜர்! தலைவர் செல்வாமூலம் கையளித்தனர்"

ஃ ஃ ஃ

"பொலிஸார் கைதுசெய்தனர்" என்று ஒரு செய்திக்குத் தலைப்பிட்டு ஹரன் ஐயாவிடம் [தலைப்புநல்லதா என்பதற்காக] காட்டினேன். கண்ணாடியைப் போட்டுப் படித்துவிட்டு, கண்ணாடியைக் கையில் கழற்றினார்: "பொலிஸார் கைது செய்யாமல் என்ன செய்வார்கள்! ஆறுதலாகக் திடீர் வாசகர்கள் சிந்திக்கக்கூடியதாக தலைப்பு எழுத வேண்டும். நாய் மனிதனைக் கடித்தால் செய்தியல்ல. மனிதன் நாயைக் கடித்தால் தான் செய்தி..." என்று அடிப்படைத் தத்துவத்தை எனக்குப் போதித்தார்.

ஃ ஃ ஃ

வேலையில் சேர்ந்த முதல் மாதம். முதல் தடவையாக எனது சம்பளத்தை ஹரன் ஐயாவிடம்தான் பெற்றுக் கொண்டேன்.

### ஊடுருவி

"உற்சாகமாக வேலைசெய்ய வேண்டும். நம்பிக்கையை இழக்கக் கூடாது..." என்று சொல்லி, சம்பள என்வலப்பை என்னிடம் தந்தார் சற்றுத் தூரம் சென்று பிரித்துப் பார்த்தேன் தனி ஐம்பது ரூபா மட்டும்தான!

ஃ ஃ ஃ

அடுக்கடுக்காகக் குழந்தைகள் பிறந்துவிட்டன. ஏதாவது சம்பள உயர்வு கிடைக்காதா என்று ஏங்கி, அதிகாலையிலேயே ஹரன் ஐயாவிடம் சென்று: "ஸேர்... எனக்கு மற்றுமொரு

(6ம் பக்கம் பார்க்க)

# கர்நாடகத்தில் ஏரி உடைப்பெடுத்து 115 பேர் பலி!

## காட்டு கிராமம் நீரில் மூழ்கியது

பெங்களூர், அக். 20

கர்நாடக மாநிலத்தில் உள்ள பழைய ஏரி ஒன்று உடைப்பெடுத்ததை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 115 பேர் பலியாகினர் என்றும் காட்டுப் பகுதி கிராமம் ஒன்று வெள்ளத்தில் மூழ்கிவிட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலை அருவி ஒன்று பெருக்கெடுத்ததை அடுத்தே அந்தப் பழைய ஏரி உடைப்பெடுத்தது என்றும் இவ் வெள்ளப் பெருக்கை அடுத்து "கோபிநத்தம்" என்ற கிராமம் நீரில் மூழ்கி ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடர்ந்த காடுகள் நிறைந்த அந்தக்கிராமத்திற்குச் செல்லக் கூடிய ஒரே ஒரு பாதையில் தற்காலிக பாலம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

### 80 வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன

"கோபிநத்தம்" கிராமத்து மக்கள் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் நடுநிசியில் வெள்ளம் பெருக்கெடுத்து 80 வீடுகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன என்றும் இவ் வெள்ளத்திற்குப் பலியானோர்களில் 21 பேர் குழந்தைகள் என்றும் அறிவிக்கப்பட்டது.

### குண்டுராவ் நேரில் விஜயம்

வெள்ளம் பாதித்த பகுதிகளை கர்நாடக முதல்வர் திரு. குண்டுராவ் ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட்டார். (இ)

## அனுதாபம்

பெங்களூர், அக். 20

கவிஞர் கண்ணதாசனின் மறைவு பாரதத்துக்கும் பேரிழப்பு என கர்நாடக முதல்வர் திரு. குண்டுராவ் அமரரின் குடும்பத்தவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

# 'மூளைசாலிகள், வெளியேற்றம் இளம்நாடுகளைப் பாதிக்கிறது'

நாருஸ்ஸலாம் அக். 20

1961ம் ஆண்டு முதல் 1980 ம் ஆண்டுவரை மூன்றும் உலகிலிருந்து 500,000 நிபுணர்கள் மேற்குலக நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களில் முக்காலபங்கு அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற ஐ. நா. வின் வர்தகம் அபிவிருத்திக்கான மாநாடு [அங்ராட்] தெரிவித்துள்ளது.

இந்த நிபுணர்கள் மூலம், மேலைநாடுகள் 1970-77 பகுதியில் 500 கோடி டாலர்களை மீதப்படுத்தியுள்ளன லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியாவிலிருந்து அமெரிக்காவிக்கு சென்று குடியேறுவோர் தொகையும் அதிகரித்துள்ளது.

"மூளைசாலிகளை வருடா வருடம் இழந்துவரும் நாடுகளின் முன்னேற்றம் இதனால் தடைப்படுகிறது. பொருளாதாரம், கலாசாரம், கல்வி. சுகாதாரம் ஆகிய துறைகளில் அவை முன்னேற முடியவில்லை. உதாரணமாக வட அமெரிக்காவில் 500 பேருக்கு ஒரு டாக்டர் உள்ளார். அதே வேளையில் கிழக்காபிரிக்காவில் 17,500 பேருக்கு ஒரு டாக்டர் இருக்கிறார். யுனெஸ்கோவின் மதிப்பீட்டின்படி விஞ்ஞான. தொழில்நுட்பப் புரட்சி முன்னேற பத்து லட்சம் பேருக்கு 1000 விஞ்ஞானிகள் தேவை ஆனால் சேனகல், கென்யா, சாரு ஆகிய நாடுகளில் 100க்கும் குறைவானவர்களே உள்ளனர். அமெரிக்கா, வட ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளில் 1000 க்கும் அதிகமான விஞ்ஞானிகள் உள்ளனர். வளர்முக நாடுகளின் திறமைமான மாணவர்களில் 50 சத வீதமானவர்களை மேற்குலகம் கவர்ந்து விடுகிறது என்று 'வெஸ்ட் ஆஃப்ரிக்கன் பைலட்' என்று நைஜீரியப் பத்திரிகை எழுதுகிறது.

## ரூ. 5,000பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

மாவாக்கச்சென்ற பேக்கரிக்காரரின் பணம், காசோலை, மூக்குக்கண்ணாடி ஆகியவற்றைக் கொள்ளையடித்ததாகக் கைதான இருநபர்கள் தலா 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு அவர்கள் மீதான தீர்ப்பு இம் மாதம் 28ம் திகதி வழங்கப்படஉள்ளது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மகேந்திரன் என்பவர் குரும்பசிட்டியிலுள்ள ஒருபேக்கரிக்கு மாவாக்கச் செல்வதற்காக 11 ஆயிரத்து 106 ரூபா பணம், 956 ரூபா பெறுமதியான காசோலை ஆகியவற்றுடன் சென்ற சமயம் அவரை வழிமறித்து பணத்தையும், காசோலையையும் கொள்ளையடித்த இருநபர்கள் 150 ரூபா பெறுமதியான அவரது மூக்குக் கண்ணாடியையும் அபகரித்துச் சென்றார்களாம். இதுதொடர்பாக விசாரணைசெய்த சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் குப்பிளானைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிரமலை, விசுவலிங்கம்சங்கரலிங்கம் ஆகியோரைக் கைதுசெய்து, பணம் காசோலை, மூக்குக்கண்ணாடி ஆகியவற்றையும் மீட்டிருந்தனர்.

இந்நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் முன் நிலையில் இழமை ஆஜர்செய்யப்பட்ட சமயம் வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி எம். ஸ்ரீதரன் இச்சம்பவம் பாரதூரமானதென்றும், கொள்ளை வழிப்பறி என்பவற்றுக்கு பிணை வழங்கக்கூடாதென்றும் இவர்களை றிமாண்டில் வைக்க வேண்டுமென்றும் வாதாடினார். எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் க. நடராசா, ஆர். ஜே. செல்வரத்தினம், எஸ் ஸ்ரீதரன் ஆகியோர் ஆஜராகி எதிரிகளை பிணையில் விடுமாறு கோரினர்.

இந்த இரு எதிரிகள் மீதும் மேற்படி பணம், காசோலை மூக்குக்கண்ணாடி ஆகியவற்றை கொள்ளையடித்தது. திருட்டுப் பொருட்களான அவற்றை வைத்திருந்தது ஆகிய இரு குற்றச்சாட்டுகளை சுன்னாகம் பொலிசார் சுமத்தியிருந்தனர். எதிரிகள் முதற்குற்றச்சாட்டை ஏற்கமறுத்தனர். இரண்டாவது குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து முதற்குற்றச்சாட்டை சுன்னாகம் பொலிசார் வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

இக்கொள்ளைச் சம்பவம் சோடிக்கப்பட்ட ஒன்றென்றும், கொள்ளைக் குற்றச்சாட்டைப் பொலிசாரும் வாபஸ்பெற்றுள்ளதால் இவர்களை றிமாண்டில் வைக்க முடியாதென்றும், திருட்டு நகைகளை வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு பிணை அனுமதி

(5-ம்பக்கம் பார்க்க)

## நோபல் பரிசு

லண்டன், அக். 20

பௌதிகம், இரசாயனம் ஆகிய துறைகளுக்கான 'நோபல்' பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பௌதிகத்துறையில் நோபல் பரிசு இரு அமெரிக்க விஞ்ஞானிகளுக்கும் சுவிடிஷ்விஞ்ஞானி ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இரசாயனத்துறைக்கான 'நோபல்' பரிசு அமெரிக்க ஜப்பான் பேராசிரியர்களுக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. (இ)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 5ம் திகதி புதன்கிழமை (21-10-81)

மேடம்: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்கும் பெருகும். செல்வாக்கும் படைத்தவர்களின் ஆதரவு இடைக்கும்.

இடபம்: மண வாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தையின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். புதுமனை கட்டுவதற்கு இலர் ஆலோசிக்கலாம்.

மிதுனம்: அர்த்த விடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்

கடகம்: உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும், பணவிவகாரத்தின்மூலம் பகைதோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

சிம்மம்: அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பில் உங்களுக்கு அதிர்ஷ்டம் இடைக்கும் திரைப்படத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகம் அளிக்கலாம்.

கன்னி: மனதில் அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும் அமைதியே நன்று.

துலாம்: தர்மவழியாக பெருமைகள் சேரும் தனத்துடன் வாழ்வு இடைக்கும் எதிரிகள்கூட உங்களை வரவேற்பார்கள். மருத்துவத் துறையில் ஈடுபடுவோர்க்கு நல்ல தினம்.

விருட்சிகம்: வானம் பாடி போலகானம் இசைப்பீர் வாழ்வும் ஒளி வீசும் ஆதியவர் ஒருவர் உமக்கு நல்வழி காட்டுவார்.

தனு: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம் கடமை பார்க்குமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்: சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள் சார்ந்திருந்த கன்னாளும் களிப்பூட்டும் விருந்தொன்று இடைக்கும்.

கும்பம்: சிறுமி வாட்டும் ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ளவேண்டாம். வாழ்க்கை இன்று சுமைபோலத் தோன்றக்கூடும்.

மீனம்: இரக்கசிந்தை மேலோங்கும் பிறருக்கு உதவுவதில் பெரும் மகிழ்ச்சியடைவீர்கள். முன்னாள் ஆசிரியர் ஒருவரின் பரிசு இடைக்கும்.

சோதிட கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# சீமெந்துக் கூட்டுத்தாபன தொழிலாளர் நலனில் நிர்வாகம் அக்கறை!

(மாவிட்டபுரம்)

"சீமந்துக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை கூட்டுத்தாபன தொழிலாளர்களது சேமநலனில் அதிக அக்கறை கொண்டுள்ளது. இதற்காக இதுவரை பல நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். தொடர்ந்தும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம்."

இவ்வாறு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை குடிசையில் பாலர் பாடசாலையொன்றை ஆரம்பித்துவைத்துப் பேசிய இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்தின கூறினார்.

சீமெந்துத் தொழிற்சாலை இளைஞர் முன்னேற்ற கழகம் 13 ஆண்டுகளாக நடத்திவந்த இப்பாலர் பாடசாலையை கூட்டுத்தாபனம் சார்பில் பொறுப்பேற்று அதனை திறந்துவைத்த கூட்டுத்தாபன தலைவர். மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சீமெந்துக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை தொழிலாளர்களது நலனில் அதிக அக்கறை கொண்டுள்ளது வேறெந்தக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையும் இவ்வாறு அக்கறை எடுக்கவில்லை. உற்பத்தி அதிகரிப்பு, தொழிற்சாலை அபிவிருத்தி ஆகியவற்றில் கவனம் எடுக்கும் நேரத்தில் தொழிலாளர்களது கஷ்டங்களையும் நாம் உணராமல் இருப்பதில்லை. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்து வருகிறோம்.

இன்று திறக்கப்படும் பாலர் பாடசாலையில் தொழிலாளர்களது குழந்தைகள் சிறப்பாக கல்விபெறமுடியும். இன்றைய குழந்தைகளே நாளைய சந்ததியினராகையால் அவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுப்பது அவசியமாகின்றது இப்பாலர் பாடசாலையுடன் தொழிலாளர்களது சுகாதாரம், உடல் நலம், குடும்பநலம் என்பவற்றைக் கவனிக்க தனியொரு பிரிவும் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமல்ல மேலும் பல வசதிகளைப்புசெய்துகொடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம் என்றார்

மற்றும் சீமெந்துக்கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையைச்சேர்ந்த திரு. ரணதுங்கா, பேராசிரியர் ஜெயதிலகா, கலாநிதி. பி. எஸ் சில்வா, பொதுமுகாமையாளர் திரு. விதஹெட்டி யாராய்ச்சி, சேமநலவிருத்தி இணைப்பதிகாரி திரு. குணவர்த்தனா, சீமெந்துத் தொழிற்சாலை இளைஞர் முன்னேற்றக்கழக தலைவர். இ. கதிர்காமர், செயலாளர், திரு எஸ். சிவபாலச்சந்திரன் ஆகியோரும் பேசினர்.

## 270 ஈராக் சிப்பாய்கள் கொலை

தெஹ்ரான், அக் 20

ஈராக்—ஈரான் குர்திஷ்தான் மாகாண எல்லையில் நேற்று இருநாட்டு படைகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையின் 270 ஈராக்கிய சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஈரான் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது இப்போரில் 42 ஈரானிய துருப்புக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ம.பிரதேசத்தில் 65 ஆயிரம்பேர் பார்வையற்றவர்

புதுடில்லி, அக் 20

மத்தியப் பிரதேசத்தில் 65 ஆயிரம் பேர் கண்பார்வையற்றவர்கள் என்றும் 25 ஆயிரம் பேர் வாய்பேச முடியாதவர்கள் என்றும் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ)

## பலவனையாளர் சங்கம்

மருதங்கேணி கிராமசேவை யாளர் பிரிவுக்கான பாவனையாளர்சங்கத்தின் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பொ சங்கரப்பிள்ளை செயலாளர்: இ கருணாகரன் பொருளாளர்: இ கோசேல் அ ஆரியகுமார், இ தங்கவடிவேலு, த சுந்தரலிங்கம், இ இராசகாந்தன், வே கந்தையா, க நடராசா, வே சுப்பிரமணியம், வே கோணையுதபிள்ளை ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# சூடான் அரசைக் கவிழ்க்க லிபியா சதி!

## சதிகாரர்கள் 10ஆயிரம் பேர் கைது!

கார்டூம், அக்.20

சூடான் அரசைக் கவிழ்ப்பதற்காக லிபிய அரசினால் தூண்டப்பட்டு சூடானில் இயங்கிவந்த 10 ஆயிரம் பேரை சூடான் அரசு கைது செய்து சாவலில் வைத்துள்ளது

சூடானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கமுன் வந்துள்ளதை அடுத்தே லிபியா சூடானுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நினைத்தாலே இனிக்கும்
(கலர்)

ஹரன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி- விஜயா
ராமு

றீகல் (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 4-45, 7-00, 9-30
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 20, 21 வரை
'பசேச்' படம் நீடிக்கப்பட்டுள்ளது.
"THE PASSAGE"

# கிராமிய வளர்ச்சியில் பெண்களின் பங்கு

## வளர்ந்தோர் கல்வி அதிகாரி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கிராம வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பெண்கள் கூடியளவில் செயல்பட வேண்டும். பெண்கள் கூடிய வல்லமை உள்ளவர்கள். வல்லமையைக் கொண்டு சேவை மனப்பான்மையுடன் தொழிற்படுவதற்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் இன்றியமையாதன. மாதர் சங்கம் மூலம் யுவதிகளும் பெண்களும் சகலதுறைகளிலும் கூடிய திறமைப் பெற்று வளர்ச்சியடையக்கூடிய திட்டங்களை வகுத்து சமூதாய பொருளாதாரத் துறையில் முன்னேற ஒற்றுமையான பரந்த நோக்குடன் தொழிற்பட வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு சி. எஸ். சுப்பிரமணியம் கட்டப்பிராய் கலைமணி வாசிகசாலையில் நடைபெற்ற மாதர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் மூலம் சுற்றாடற் கல்வி உணவும் போசாக்கும், சனத்தொகைக் கல்வி தொழிற் கல்வி முதலுதவியைப் பற்றிய அறிவு ஆகியவற்றை மாதர்கள் பெறுவதற்கு இச்சங்கம் உதவ முடியும் என விளக்கினார்.

உடற்சுத்தம், உடைச் சுத்தம், உறைவிடச் சுத்தம் சுற்றாடற் சுத்தம் மக்கள் சகல துறைகளிலும் முயற்சியுடன் முன்னேறுவதற்கு மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். சமனிலை உணவு, வீட்டுத்தோட்டம், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் முறை ஆகியவற்றை விபரித்து மேலும் வறுமையை ஒழிப்பதிலும் சமய வழிபாடுகளில் ஈடுபடுவதனாலும் சுய கைத்தொழில்களிற் போதிய பயிற்சியைப் [illegible] பெறுவதனாலும் சேவைக் கழகங்களிற் சேர்ந்து சேவைபுரிவதனாலும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு [illegible] வித்திட முடியும். (இ)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மீனவ நண்பன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — தேவிகா
பச்சை விளக்கு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
பார்த்தால் பசி தீரும்

8 வது வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ்நகர்)
மஞ்சுபார்கவி ... சோமயாஜுலு
சங்கராபரணம் (கலர்)

ராணி 9வது வாரம்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ். சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

சாந்தி 5வது வாரம் ஹவுஸ்புல் வாரம்
(யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
நம்பியார்
வெண்ணிற ஆடை
நிர்மலா- முத்துராமன்-
சுந்தரராஜன்
காட்சிகள் வழமைபோல் நடைபெறும்.

மனோகரா (யாழ்ப்பாணம்) 22-10-81 மட்டும்
தினசரிக்காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
ஏ. வி. எம். ராஜன் நாகேஷ்
A. V. M. தயாரிப்பு
நானும் ஒரு பெண்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த், சீமா (இருவேடம்)
விஜய குமார், படாபட்
மனோரமா
காளி
சினிமாஸ்கோப் கலர்

RaJah Talkies
Daily 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
Jack Lemmon Lee Grant
Christopher Lee
AIRPORT 77
Scope—Color
All new bigger more exciting than "AIRPORT 75"
flight 23 has crashed in the bermuda Triangle
passengers still alive trapped under water.

# பொலிஸார் பாராட்டு

(சுண்டிக்குளி)

யாழ்ப்பாண நகரில் தனது சைக்கிளைப் பறிகொடுத்த இளைஞர் ஒருவர் நகர் முழுவதும் தேடுதல் நடத்தி தனது சைக்கிளையும் அதைத் திருடியவரையும் கண்டுபிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்து பொலிசாரின் பாராட்டையும் பெற்றுள்ளார்!

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மூன்றும் குறுக்குத் தெருவைச் சேர்ந்த குமாரசாமி ரகுநாதன் எனும் இளைஞர் யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரில் தனது சைக்கிளைப் பறிகொடுத்தார். ஆனாலும் மனம் தளராது சுமார் நான்கு மணித்தியாலம் யாழ். நகர் முழுவதும் தேடுதல் நடத்தி இறுதியில் ஒரு சைக்கிள் கடையில் விலை பேசப்படுவதைக் கண்டுபிடித்து சைக்கிளையும் அதைத் திருடியவரையும் யாழ். பொலிசில் ஒப்படைத்தார்.

"சைக்கிளைப் பறிகொடுத்தவர் பொலிசில் முறைப்பாடு செய்வதுடன் நிறுத்திக்கொள்வார்கள். சிலர் அதுகூடச் செய்யாமல் பேசாமல் விட்டுவிடுவார்கள். ஆனால் மனம் தளராமல் தனது சைக்கிளை கண்டுபிடித்து திருடியவரையும் யாழ். பொலிசில் ஒப்படைத்த குமாரசாமி ரகுநாதனையும் அவருக்கு உதவிய அரசரத்தினம் ரவீந்திரனையும் பாராட்டுகின்றோம்" என்று குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

## ரூ. 5000

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டென்றும் 2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜெ. செல்வரத்தினம் வாதிட்டார்.

இறுதியில் பதில் நீதிபதி இருவரையும் தலா 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து திருட்டு பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டு [illegible] வழக்கை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# பொதுநல அமைப்பின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு புதிய அரசாங்கத்தின் பிரதமரை நியமிப்பதும், புதிய பாராளுமன்றத்தை ஆரம்பித்து, அரசின் கொள்கை விளக்கமான சிம்மாசனப்பிரசங்கத்தை நிகழ்த்துவதும் பிரிட்டனில் இன்னும் இராணியே. பிரதமர் மகாராணியை வாரமொருதடவை சந்திப்பார். பிரதமர் மூலமாக மகாராணி அமைச்சரவையுடன் தொடர்புகொள்வார் ஏனைய அமைச்சர்களையும் சந்திப்பார். அமைச்சரவை தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவார். அமைச்சரவை நடவடிக்கைகளைப் பார்வையிடுவார் வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட தொடர்பு பரிவர்த்தனைகளைப் பார்வையிடுவார். பாராளுமன்ற நடவடிக்கைகளையும் அவர் கவனிப்பார்.

பாராளுமன்றச் சபைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமூலம், அது சட்டமாவதற்கு முன்னர் மகாராணியின் அங்கீகாரத்தைப் பெற்று அது இரு சபைகளிலும் அறிவிக்கப்பட வேண்டும். அமைச்சர்கள், நீதிபதிகள் போன்றோரை நியமிக்கும், நீக்கும் அதிகாரமும் மகாராணிக்கு உண்டு. பாராளுமன்றம் ஒன்றைக் கலைக்கும் அதிகாரத்தைக் கொண்ட மகாராணி அதனைப் பொதுவாகப் பிரதமரின் ஆலோசனையுடனேயே செய்வார். படைகளின் தலைவியாகவும் மகாராணியே விளங்குகிறார்.

### அமெரிக்காவும் மதிக்கும் ராணி

ஆக, இத்தகைய அதிகாரங்களை முடி கொண்டிருந்த போதும் கட்சி அரசியலுக்கு அது உட்படாத காரணத்தினாலேயே பிரிட்டிஷ் மக்கள் முடியின்மீது இன்னமும் மிகுந்த மதிப்பும் அன்பும் வைத்திருக்கிறார்கள் எனலாம். இது தவிர முடியின் தற்போதைய அதிகரித்த செல்வாக்குக்கு மற்றுமொரு காரணமும் இருக்கிறது. மகாராணியின் பெற்றோரான ஆறாம் ஜோர்ஜ் மன்னரும் எலிஸபெத் அரசியாரும் மக்களோடு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி, மக்கள் சேவையில் சிறந்துவிளங்கினார்கள். இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது இதனை துல்லியமாகக் காணக்கூடியதாக இருந்திருக்கிறது. அன்று நாட்டுமக்கள் புரிந்த ஒவ்வொரு தியாகத்திலும் ஆறாம் ஜோர்ஜ் மன்னரும் எலிஸபெத் அரசியாரும் பூரணமாகப் பங்குகொண்டனர். அதே வீதத்தில் இன்றையமகாராணி இரண்டாம் எலிஸபெத்தும் அவரது கணவர் பிலிப் கோமகனும் இப்பாரம்பரியத்தைப் பேணி, மாறிவரும் சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப, முடியாட்சியை மதிநுட்பத்துடனும், புரிந்துணர்வுடனும் அவர்கள் மாற்றிக்கொண்டுள்ளனர். பொதுவாக முடியானது அரசமைப்பு ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் மக்களின் இன்றைய மனப்பாங்கினை ஈடுசெய்கின்றது. காலவேகத்துக்கு ஏற்றவாறு ஈடுகொடுக்கின்றது. பிரித்தானிய மக்களின் மதிப்பை மாத்திரமன்றி, பிரித்தானிய குடியேற்றக் கொள்கைக்கு எதிராக 3-ம் ஜோர்ஜ் மன்னர் காலத்தில் கிளர்ச்சியில் ஈடுபட்ட அமெரிக்காவே அண்மையில் அமெரிக்காவின் 200-வது சுதந்திரதினத்தில் கலந்துகொள்ளச்சென்ற மகாராணிக்கு பெரும் வரவேற்பளிக்கும் ஒரு மதிப்பை பிரித்தானிய முடிபெற்றிருக்கிறது; எலிசபெத் மகாராணியார் பெற்றிருக்கிறார்.

பட்டத்து இளவரசர் சார்ல்ஸுக்கு அண்மையில் நடந்த திருமண வைபவத்தில் உலகு காட்டிய அக்கறை— ஆரவாரமும் இதை துல்லியமாகவும் எளிதாகவும் விளக்குவதாகும்.

பட்டத்து இளவரசருக்கு இப்பயணத்தைக் கொண்டாடி, அடுத்தமாதம் 20-ந் தேதி தங்களுடைய திருமணத்தின் 34 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் மகாராணி எலிஸபெத்தும் எடின்பரோ கோமகனும் இலங்கையில் வளர்ந்தோர் வாக்குரிமையின் 50வது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொள்ள இன்று இலங்கை வருகிறார்கள். இது இவ்வரச தம்பதிகளின் இரண்டாவது இலங்கை விஜயமாகும். தந்தையாருக்குப் பின்னர் மகாராணியாக முடி சூடியதும் பொதுநலவமைப்பு நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட முதலாவது சுற்றுப் பயணத்தில் 1954ம் ஆண்டு தமது கணவருடன் முன்னர் இலங்கை வந்திருந்தார்.

### அரசியல் வரலாறும் சட்டமும் பயின்றவர்

6ம் ஜோர்ஜ் மன்னருக்கும் எலிஸபெத் அரசியாருக்கும் மூத்த புதல்வியாக, 1926 ஏப்ரல் 21ந் தேதி லண்டனில் பிறந்தவர் மகாராணி. 5 வாரங்களின் பின்னர் பக்கிங்காம் அரண்மனைத் தேவாலயத்தில் "எலிஸபெத் அலெக்ஸாந்திரா மேரி" என்று அவருக்குப் பெயரிடப்பட்டது. அப்போது பட்டத்தில் இருந்தவர் ராணியின் பேரரான 5ம் ஜோர்ஜ் மன்னர். அவரது துணைவியார் ராணி மேரி. தந்தையார் 6ம் ஜோர்ஜ் மன்னர் 1936ல் முடியேற்றார். அரண்மனையிலேயே தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட மகாராணி, அரசியல் வரலாறும், சட்டமும் பயின்றவர். அத்துடன் இசை, குதிரையேற்றம், நீச்சல் ஆகியவற்றிலும் வல்லவர்.

### திருமணம்

1947ம் ஆண்டு முதன் முறையாக தமது பெற்றோருடனும் சகோதரி இளவரசி மார்கிரட்டுடனும் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு தென் ஆபிரிக்கா சென்று திரும்பியதும் இளவரசி எலிஸபெத்தின் திருமண நிச்சயதார்த்தம் அறிவிக்கப்பட்டது. இளவரசி எலிஸபெத்தைப் போலவே இளவரசர் பிலிப்பும் விக்டோரியா மகாராணியின் கொள்ளுப்பேரராவார். மைத்துனரான இளவரசர் பிலிப்பை இளவரசி எலிஸபெத் பலவருடங்களாகத் தெரிந்திருந்தார். 1947 நவம்பர் 20-ந் தேதி இவர்களது திருமணம் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நடைபெற்றது.

1948ல் வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸும், 1950 இல் இளவரசி ஆனும் 1960ல் இளவரசர் அன்ட்றூவும், 1964 இல் இளவரசர் எட்வேர்ட் பிறந்தனர்.

1952இல் மன்னர் ஜோர்ஜ் மேற்கொள்ளவிருந்த அவுஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்குமான விஜயத்தை சுகவீனம் காரணமாக அவர் மேற்கொள்ள இயலாது போனபோது அப் பயணத்தை மன்னருக்குப் பதிலாக இளவரசியும் கணவரும் மேற்கொண்டு அவர்களது பயணத்தின் முதற்கட்டமாக கென்யாவை அவர்கள் அடைந்தபோது, தந்தையாரின் மரணச் செய்தியை இளவரசி பெற்றார்.

1953 யூன் 2ந் திகதி வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் இளவரசி எலிஸபெத், மகாராணியாக தந்தையாருக்குப் பின்னர் முடிசூடினார்.

தந்தையாரின் மரணத்தால் தன்னுடைய பயணத்தை இடைநிறுத்தி லண்டன் திரும்பிய இளவரசி எலிஸபெத் மகாராணியாக முடிசூடி மீண்டும் அப்பயணத்தை தொடர்ந்த வேளைதான் அவர் முன்னர் இலங்கைவந்திருந்தார்.

முடிதரித்த அதன் வெள்ளிவிழாவை 1977 இல் கொண்டாடியபின்னர் அவர் இப்போதுமீண்டும் இலங்கை வருகிறார். (அ)

# தொழிற்சங்க நடவடிக்கை கைவிட முடிவு

(கொழும்பு)

மகாராணியாரின் இலங்கை விஜயத்தின்போது மேற்கொள்ளஇருந்த தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கைவிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 22-ம் திகதி 25 ம் திகதி தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதென தொழிற்சங்கசம்மேளனமும் தொழிலாளர் சம்மேளனமும் ஏற்கனவே முடிவு செய்திருந்தன.

கடந்த ஆண்டு வேலை நிறுத்தம் காரணமாக வேலை இழந்தோர் விவகாரம் குறித்து லங்கா சமசமாஜக்கட்சித் தலைவ திரு. பெர்னாட் சொய்சா, ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே மேற்படி சம்மேளனங்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கையை விடுவதென தீர்மானித்துள்ளன.

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

# மருந்துமூலிகைவகைகள் பயிர் செய்யப்படும்

## அபிவிருத்திசபை முடிவு

(யாழ்ப்பாணம்)

மருந்துமூலிகை பயிர்ச்செய்கைத்திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் மருந்து மூலிகைகளைப் பயிரிடுவதன்மூலம் சித்தஆயுர்வேத வைத்திய சாலைகளுக்கும் வைத்தியர்களுக்கும் வழங்குவதற்காக சித்த மருந்துவகைகளை உற்பத்தி செய்ய யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்படியாக கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பெரும்பான்மையாகத் தேவைப்படும் மூலிகைகளை வளர்க்க விவசாய ஆராய்ச்சி நிலைய பிரதிப் பணிப்பாளர் திரு. ஜே. ஏ. லூயிஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மூலிகைத்தோட்டத்தில் பயிரிடும் மூலிகைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க யாழ். மாவட்டத்திலும் வெளி மாவட்டத்திலும் உள்ளவர்கள் இந்நிலையத்திற்கு மூலிகை விதைகளையும் வழங்கி உதவலாம்.

இவ்வாறு வழங்குவோர் கிளிநொச்சி ஆராய்ச்சி நிலையத்தில் பயிரிடும் திட்டத்திலிருந்து மூலிகை விதைகள், கன்றுகளைப்பெற்று தமது வீட்டுத் தோட்டத்தில் பயிரிடலாம்.

இது தொடர்பான விபரங்களை யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசனிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தகவலை யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. கே. சிவலிங்கம் தெரிவித்தார். (இ)

# வயோதிபர் மரணம்

(சுண்டிக்குளி)

தான் இறப்பதற்குள் எப்படியும் ஒரு உறுதிப்பத்திரத்தை எழுதிவிடவேண்டும் என்று விரும்பி ஒரு சட்டத்தரணியின் உதவியை நாடிச்சென்ற ஒரு வயோதிபர்; வழியிலேயே ஒரு மோட்டார்சைக்கிளினால் மோதுண்டு மரணமானார்.

இச் சம்பவம் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் நிகழ்ந்துள்ளது.

விபத்துக்குள்ளான திரு. மயிலு சுப்பையா (வயது81) வின் மரண விசாரணையை யாழ். பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் நடத்தினார்.

மோட்டார்சைக்கிள் சாரதி சண்முகம் வரதராசாவையும் சைக்கிளில் வந்த கனகரெத்தினம் ரட்ணம்மகேசனையும் யாழ் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த வி. தேவசகாயம் கைதுசெய்து பதில் நீதவான் அமிர்தலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தார் நீதவான் மோட்டார்சைக்கிள் சாரதியை இம் மாதம் 23ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## அவசரமருந்துகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள், யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் முதலியோர் மகாநாட்டில் கலந்துகொண்டனர். (மா)

## உலாப்பாடுவதை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிந்துபோய்விட்டன; போய்க் கொண்டிருக்கின்றன. இராசதானி நல்லூரிலுள்ள சட்டநாதர் ஆலயத்தை அழகுடன் நிர்மாணித்த விசயகூழங்கைச் சக்கரவர்த்தியின் நினைவுச் சின்னங்கள் அநேகம் அழிந்து விட்டன. ஒரு சில பற்றைகள், மரங்கள் முளைத்தபடி மறையும் நிலையில் இருக்கின்றன. "வீசுபுகழ் நல்லூரான் வில்லவராயன் கனகவாசலிடை கொன்றைமரம்" கொன்றைகள் உண்டு; வேறொன்றையும் காணவில்லை. மேலும் "சாவகச்சேரியிலுள்ள வாரிவனேச்சரம், உருத்திரபுரத்திலுள்ள உருத்திரபுரீச்சரம் ஆகிய ஈசுரங்களையும் பொலிவுபெற்று நிலைபெறச்செவதற்கு, சிவனருட் செல்வர்கள் முன்வருதல் வேண்டும்."

மேலும், இலங்கையை ஆண்ட தமிழ்ப் புலவர் சிகாமணி, சோதிட வைத்திய சாஸ்திரங்கள் தந்த ஆரிய பரராசசேகர மன்னன் சமஸ்தானத்திற்கு, ஒர்கால் அகஸ்திய மாமுனிவரின் மைந்தன் சித்தமுனிவரின் புதல்வன் சுபதிட்ட முனிவர் வந்து இன்ன இன்ன காலத்தில் இன்னாரின்னார், பறங்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையை ஆழ்வார்கள் எனக் கூறிப்போனார் என வரலாறு உண்டு;

எமது அநேக வரலாற்று நூல்கள், வரலாற்று இடங்கள் நெடுந்தீவில் உண்டு; எனது தந்தை ஒரு சோதிடர். அவர் நெடுந்தீவில் அநேக ஏட்டுச் சுவடிகளைத்தான் பார்த்ததாகக் கூறியுள்ளார். ஆராய்ச்சியாளர்களுக்கு இது சமர்ப்பணம்.

ச. சபாரத்தினம்

ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.


## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

ஆரம்பித்திருக்கும்

# உல்லாச பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

## யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:

செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில

## கொழும்பிலிருந்து புறப்படுதல்:

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 7596.

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

J. M. S. மிராண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

கட்டணம் ரூபா 65-00


# தெல்லிப்பளையில் சீனி விலைகுறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சீனியின் விலை சீராக இல்லை. யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தில் ஒரு கிலோ சீனி ரூ 15-50 சதமாகவும் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் ரூ. 15 ஆகவும், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் ரூ 14-50 சதமாகவும் விற்கப்படுகிறது.

அரசாங்கத்தின் சீனி விலை ஒரு கிலோ ரூபா 15-50 சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

# நினைவுகள் ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை பிறந்திருக்கிறது..." என்று கூறினேன் "அப்படியா... கடவுள் காப்பாற்றுவார்... கடவுள் பக்தி இருந்தால் எல்லாமே நடக்கும்..." என்று வெறும் கையுடன் என்னை அனுப்பினாலும், பக்தியை ஊட்டியவரும் அவர்தான்!

ஃ ஃ ஃ

அரசாங்கத்தைக்கவிழ்க்க முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கொழும்பில் சதி வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தது. சில நாட்களில் இரவில் நான் பொறுப்பாக வேலைசெய்தேன். சில சந்தர்ப்பங்களில், பரபரப்பாக தலைப்புச் செய்தி இடம் பெற்றுவிடும். ஒருநாள் இரவு வேலை முடிந்து அடுத்தநாட் காலை சுமார் ஆறுமணியளவில் வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானேன். ஹரன்ஐயா என்னைக் கண்டார். கையில் பத்திரிகை. "நீங்கள்தானா நைட்டியூட்டி" என்று கேட்டார். ஆம் என்றேன்.

"நீங்கள் இரவுவேலை பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது" என்று ஆக்ரோஷமாகக் கூறி 'ஏன் இப்படி ஹெடிங் போட்டு மக்களைப் பயமுறுத்துகிறீங்க..... மற்றப்பத்திரிகைகள் எதையாவது போடட்டும் நம் வாசகர்கள் அமைதியானவர்கள் சாந்தமானவர்கள்.... அவங்க பேப்பரைப் படிக்கிற போது மாரடைப்பு வருவது போல ஹெடிங் போடக் கூடாது......" என்றார்.

ஃ ஃ ஃ

எம். ஜி. ஆர். என்றால் அப்பொழுது ஹரன்ஐயாவுக்கு அலர்ஜி தப்பித்தவறி முதல் பக்கத்தில் பெரிதாக எம். ஜி. ஆர் செய்தி வந்துவிட்டால், அவரிடமிருந்து நிச்சயம் 'மங்களம்' எதிர்பார்க்கலாம்.

தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. எம். ஜி. ராமச்சந்திரனும் (தி. மு. க. சார்பில்) போட்டியிட்டார். முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்தன. "எம். ஜி. ஆர். வெற்றியா..." என்று தொலைபேசியில் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள் வாசகர்கள்! ஒருகட்டத்தில் 'ஈழநாடு' இயக்குநர்களில் ஒருவரான திரு. பா. சிவானந்தன் என்னிடம் வந்தார். தமிழ்நாடு எலக்ஷன் நியூஸ் எப்படி என்றார். எம். ஜி. ஆர். முன்னணியில் நிற்கிறார் என்றேன். "நியூஸ் சரி என்றால் ஸ்பெஷல் எடிஷன் (விசேட பதிப்பு) போடுவோம்" என்றார்.

நிச்சயம் எம். ஜி. ஆர். வெற்றிபெறுவார் என்றேன். "அப்படியானால் நான்கு பக்கங்களில் ஒரு பதிப்பு வெளியிடுவோம். கேற்றுக்கு வெளியே நின்று பேப்பர் வருமா என்று சனங்கள் கேட்கிறார்கள். நீர் எழுதும்..." என்றார். ஹரன் ஐயா ஏசுவார் அவர் காதில் விழுந்தாலே போச்சு. அவரிடம் நீங்களே கேட்டுவிடுங்களேன்..." என்று கூறினேன். "அதை நான் பார்த்துக்கொள்கிறேன், நீர் எழுதும்...அவருக்குச் சொல்லத்தேவையில்லை..." என்றார் திரு. சிவானந்தன் நான் திகைத்துப்போய்... "நான் எழுதினால் இங்கு இருந்தபாடில்லை" என்றேன்.

"நாலுபக்க நகரப்பதிப்புத்தானே, ஆறாயிரம்தான் அடிப்போம். அவருக்குக் காட்டத் தேவையில்லை நான் சமாளிக்கிறேன். எல்லா பேப்பரையும் வெளியிலே கொண்டுபோய் விற்க ஏஜண்டுகள் போட்டியாக நிற்கிறாங்க... மிஸ்டர் ஹரன் கண்ணில் இப்போதைக்கு ஒரு பேப்பரும் படாது... நீர் எழுதும்" என்று தைரிய மூட்டினார்.

அப்பொழுது நேரம் மாலை 6-20 ஒரு பக்கம் ஆர்வம்; மறுபக்கம் பயங்கரமான பயம். ஏதோ எழுதிவிட்டேன். 'எம். ஜி. ஆர். அமோக வெற்றி!" இரவு முதல் படக்காட்சி முடிந்த கையுடன் மளமளவென்று பத்திரிகையும் விற்பனையாகிவிட்டது அலுவலகத்தில் எந்த மூலையிலாவது இந்தப் பதிப்பு இருக்கிறதா என்று நோட்டம் விட்டேன். ஆறுதல் பெருமூச்சு! ஹரன் ஐயாவின் கண்ணில் படாமல் போனால் சரி!

ஆனால் இருபத்து நான்கு மணிநேரத்துக்குள்ளாக எரிமலை வெடித்து விடும் என்று நானும்நினைக்கவில்லை, நிர்வாக இயக்குநர் திரு: சிவானந்தனும் எண்ணவில்லை!

நாளை தொடரும்

# இரவுப் படக்காட்சிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள சினிமா தியேட்டர்களில் இரவுப்படக் காட்சிகள் நேற்றும் காண்பிக்கப்படவில்லை. கடந்த வியாழக்கிழமை முதல் யாழ் நகர தியேட்டர்களில் இரவுக்காட்சிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்கள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ப. நோ. கூ. சங்கத் தேர்தல்கள் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## யாழ் காய்கறி சந்தையில்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரசந்தையும் முன்னர்போல் கலகலப்பாக இல்லை. மக்கள் கூட்டமும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. (மா)

## மயானத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் வனசிங்காவுடன் தொடர்புகொண்டு விளக்கினார். கேணல் வனசிங்கா மாதகல் இராணுவமுகாமுடன் தொடர்புகொண்டு காடாத்துவதற்கு அனுமதிக்குமாறு பணித்ததைத் தொடர்ந்து காடாத்து இடம்பெற்றது.

முதல்நாள் சடலம் தகனம் செய்யப்பட்டபோதும் இராணுவத்தினர் துப்பாக்கியுடன் அவதானித்தனராம்.

## எலிஸபெத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் வரவேற்புபசாரங்கள் மிக ஆடம்பரமானமுறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கண்டிமேயர் அறிவித்துள்ளார்

இங்கு ஒருநாள் தங்கும் மகாராணியார், இரவு கண்டி நகரின் முக்கியவரலாற்றுவைபவமான பெரஹராவைக் கண்டுகளிப்பார். அத்துடன் 24ந் திகதி காலை பேராதனை மலர்ப்பூங்காவினைச் சென்று பார்வையிடுவார். அதே தினத்தில், மகாவலித் திட்டத்தின் முக்கிய பகுதியான விக்டோரியா அணைத்திட்டத்தினையும் பார்வையிடுவார்கள் இத்திட்டத்திற்கு பிரித்தானிய அரசாங்கம் நூறு கோடி ஸ்டேர்லிங் பவுண் நிதியுதவிசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

24ந் திகதி மாலை கண்டியிலிருந்து விசேட ஆடம்பர ரயில் வண்டியில் கொழும்புக்குத் திரும்புவார்கள் இந்த ஆடம்பரவண்டிக்கு "சித்திரசேனா" எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெயர் ஆங்கிலக் கதையொன்றில் வரும், அழகிய இளம்பெண்ணைக் குறிப்பதாகும்.

25ந் திகதி நண்பகல் பன்னிரண்டு மணிக்கு அரசதம்பதியர் தமது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்புவர் (கி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள சென்ட்ரல் அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 21-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.